Tamil Short Story – Second Prize

ரமா சுரேஷ் (Rama Suresh)

ராட்சசி (Demoness)

# ராட்சசி

அவளைப் பார்க்கும் போதெல்லாம் நான் சொல்லும் வார்த்தை 'ராட்சசி! நல்லா இருப்பாளா பாவி? கடவுளுக்கு கண்ணுயில்லங்கிறது இவள் விசயத்தில் உண்மைதான்!' என்று இருவரையும் மாறி மாறி ஏதாவது திட்டிக்கொண்டே இருப்பேன். பார்க்கும் போது மட்டும் அல்ல அவளை நினைத்தாலே போதும், திட்டுவதற்கு என்னையறியாமலே வார்த்தைகளைத் தேட துவங்கி விடுவேன்.

நான் சுவா சூ காங் பக்கத்தில் உள்ள தேக்வாயில் குடிவந்து ஏழெட்டு மாதம் ஆச்சு. பலரை பலமுறை பார்த்தாலும் நினைவில் நிலைக்கமாட்டார்கள். ஆனால், ஒரு சிலரை பார்த்தவுடனே உயிரைப் போல் நினைவில் ஒட்டிக் கொள்வார்கள். அப்படி தான் அவளும். ஈரச்சந்தையின் உள்ளே இருக்கும் கோப்பி கடையின், வெளியே ஒரு மூலையிலுள்ள வட்ட மேசையில் நாலைந்து ஆண்கள், ஆண்கள் என்று சொல்லுவதைவிட தடியன்களுடன் சீட்டு விளையாடிக் கொண்டு இருந்தாள். ஒரு கையில் சீட்டும் மறுகையில் பீர் போத்தலுமாய் இருந்தவளின் இருபுறமும் அமர்ந்திருந்த தடியன்கள் அவள் முதுகையும், தோள்பட்டையையும் தடவியப்படி இருந்தனர். அவளை அந்த கோலத்தில் பார்த்தவுடன் என் முகம் அஷ்டகோணலாய் மாறினாலும், என் கண்கள் அவள் முகத்தை விட்டு அகலவில்லை. குழந்தையாய் குலுங்கி சிரித்தாள். பார்ப்பவரை வசீகரமாக சுண்டி இழுத்துச் சென்றன அவள் கண்கள். இரண்டடி தள்ளியிருந்த பூக்கடையில் பூவையும், அவளையும் பார்த்தப்படி நின்றுக்கொண்டிருந்தேன். எனக்கு பெரிதாய் எந்த வித்தியாசமும் தெரியவில்லை.

"என்ன வேணும்மா?" பூக்கடைகாரர் குரல் கேட்கவே சுதாரித்தவளாக "இரண்டு வெள்ளிக்கு மல்லிப்பூவும், இரண்டு வெள்ளிக்கு எல்லா பூவும் கலந்து கொடுங்கண்ண...." அவள் மீதுருந்த கண்களை அகற்றாமல் சொல்லிக்கொண்டு இருக்கும்போதே, அவள் என்னை நோக்கி

ஆள்காட்டி விரலை நீட்டி மடக்கி கூப்பிடவும், நான் ஒன்றும் புரியாமல் பதறிய வேளையில்தான் என் அருகில் குழந்தை வடிவில் அழகிய பூந்தொட்டி குதித்துக்குதித்து விளையாடிக்கொண்டிருப்பதைக் கவனித்தேன்.

எனக்கு புரியாத பாஷையில் அவள் குழந்தையை அதட்டவே அந்த குரலில் இருந்த கம்பீரத்தில், அவள் கையில் இருந்த மதுவை நான் ஒரே மடக்கில் குடித்தவள் போல் மயங்கி நின்றேன். அவள் குழந்தையை அதட்டியப்படி எழுந்து நிற்கவே என் போதை கோபமாக தலைக்கேறியது. என்னை அறியாமல்,

“அடி ராட்சசி முண்ட..... புள்ளதாச்சி அதுவும் நிறைமாத கர்ப்பிணி மாதிரி தெரியுறாளே!” நான் சத்தமாக புலம்பவே, பூக்கடைக்காரர் என்னை ஏறயிறங்க பார்த்துவிட்டு

“அதுசரி நீங்க இன்னைக்குதான் அவளை பாக்கிறிங்களா? அதான், இத்தனை ஆதங்கம்”

“ஏண்ணே, இப்படி குடிச்சுட்டு கூத்தடிக்கிறாளே! அவ புருசன் கண்டிக்கமாட்டானா?” நான் முடிப்பதற்குள் அவர் ட்ரம்மை ரோட்டில் உருட்டிவிட்டதை போல் சிரிக்க ஆரம்பித்துவிட்டார். அங்கிருந்தவர்களுடன், அவளும் சீட்டுக்குள் இருந்த தலையை நல்லபாம்பு படம்மெடுத்து பார்ப்பதுபோல் நிமிர்த்திப் பார்த்துவிட்டு கையில் இருந்த கொள்ளிக்கட்டையின் புகையில் முகத்தை மறைத்துக்கொண்டாள்.

கட்டிக்கொண்டிருந்த மாலையை தூக்கி பார்த்து பெருமூச்சு விட்ட பூக்கடைகாரர், “கடவுள் இந்த உலகில் எத்தனையோ கொலைக்கார பாவிகளைப் படைத்திருக்கிரார் அதற்காக வருத்தப்பட்டிருப்பாரோ, இல்லையே! இந்த பாவியை படைச்சதுக்கு நிச்சயம் வேதனைப்பட்டிருப்பார். அவள் வயித்தில் இருக்கும் பிள்ளைக்கு அப்பன் யாருனு, அந்த கடவுளுக்கே தெரிஞ்சிருக்க வாய்ப்பில்லைம்மா!”

இந்தா, அவளைச் சுத்தி உட்கார்ந்துருக்கான்களே தடியன்கள் அவனுங்க அத்தனை பேரும் அவ புருசன்தான்! எவன் அன்றைய சீட்டாட்டத்தில் ஜெயிக்கிறானோ அவன் தான் அன்றைய புருஷன்

அவளுக்கு. அந்த விசயத்தில் மட்டும் சண்டையே போட்டுக்கமாட்டானுங்க அவ்வளோ நல்லவனுங்க! சாமிக்கு பூ கட்டும்போது கண்ட கருமத்தையும் பாக்குறேன் பாரு, நான் என்ன பாவம் செய்தேன்னு தெரியலை." பூக்கடைகாரர் தலையிலேயே அடித்துக்கொண்டார்.

அப்போதுதான் நான் தலை நிமிர்ந்து அந்த கூட்டத்தை உற்றுப்பார்த்தேன். அதில் ஒரு கிழவனும் உட்கார்ந்திருந்தான். குடலைப் பிரட்டிக்கொண்டு வந்த எச்சியை துப்பிவிட்டு வந்தேனே ஒழியஅன்று இரவு மட்டுமல்ல அடுத்தடுத்து வந்த என் இரவுகளின் கருமையைத் தாயும், மகளும் உருட்டி மையிட்டுக்கொண்டனர். அவள் எந்த இனத்தை சேர்ந்தவளாக இருப்பாள் என்ற ஆராய்ச்சியில் நான் இறங்கவில்லை. காரணம் என் அறிவிற்கு எட்டிய வரை முக்காடு போட்டவர்கள் எல்லாம் ஒரு இனத்தவர். முக்காடு போடாத சிவப்பானவர்கள் மற்ற இனத்தவர். என்னை மாதிரி கருப்பா, ம்ம்கூம்..., இல்ல மாநிறமாக இருப்பவர்கள் வேறொரு இனத்தவர். சிங்கப்பூர் வந்த புதிதில் என் வீட்டுக்காரரிடம் அதுவும் ஐ சி ஏ வில் நின்றுக்கொண்டு

"ஏங்க எல்லோரும் வெள்ளையா, உருண்ட மூஞ்சியா, சின்ன கண்ணு, மூக்கு, வாயுனு வெச்சுக்கிட்டு, முடியை வளவளனு தொங்கப்போட்டுகிட்டு, ஒரே மாதிரிதான் இருக்காங்க, இவங்களை எப்படிங்க அடையாளம் கண்டுபிடிக்கிறது," என்று கேட்டேன். அப்ப என் கணவர் ஒரு பார்வை பார்த்தார், அதன் பிறகு நான் வாயை திறக்கவில்லை. எனக்கு இந்த அடையாள பிரச்சனை அவளை பார்க்கும் வரை இருந்தது. ஆனால், கடந்த ஒருவாரமாக நூறு பேரின் நடுவே அவளை மட்டுமே தேடுகிறேன்.

காலையில் மார்க்கட் பக்கம் போகும் போதெல்லாம் அவளை தேடி அலையத் துவங்கினேன். ஆண், பெண் வித்தியாசம் தெரியாமல் பாதிப்பேர் பின்னால் இருந்து பார்த்தால் ஒரே மாதிரியாக வேறு தெரிகிறார்கள். யாரவது கையில் கொள்ளிக்கட்டையுடன் நின்றால் அவளாக இருக்ககூடாதா என்று தவித்துப்போனேன். எங்காவது ஒரு குழந்தை தனியாக நின்றால் அங்கே ஓடிப்போய் மண்டியிட்டேன். ஒருவேளை பிரசவம் நடந்திருந்தால்? கடவுளே தாயும், பிள்ளையும் தனித்தனியாக பத்திரமாக இருக்கவேண்டும். என் தவிப்பை கட்டுப்படுத்த முடியாமல் பூக்கடைகாரரிடம்,

ரமா சுரேஷ் (Rama Suresh)

ராட்சசி (Demoness)

“அந்த பொண்ணுக்கு பிரசவம் நடந்துடுச்சா அண்ண?”

“எந்த பொண்ணம்மா கேக்கிறிங்க?” அவர் விழிக்கவே

“அதான், அங்க சீட்டு ஆடுவாளே.” நான் திணறினேன்

“அதுவா, ஆச்சு! எனக்கு தெரிந்து நாயி, பூனை குட்டிப்போட்டாக் கூட அஞ்சாறு நாளாவது ஓய்வில் இருக்கும். ஆனால், இவள் பிள்ள பெத்த மூணாம் நாளே தொழிலுக்கு வந்துட்டா”

நான் பதறிப்போய் “அப்படினா இப்ப வந்துடுவாளாண்ண?” எனக்குள் பொங்கிய சந்தோசத்தை பத்திரமாக ஒளித்து வைத்துக்கொண்டேன்.

“இல்லம்மா! அவள் இரண்டு மணிக்கு மேலதான் வருவா, ஆமாம் இதையெல்லாம் நீ ஏம்மா கேக்குற?”

என் காது கேட்காது என்பது போல “அண்ண பத்து வெள்ளிக்கு பூவும், ஒரு பாயச மிக்சும் கொடுங்க சாமிக்கு நேத்திக்கடன் இருக்கு”

அன்றில் இருந்து மணி இரண்டடிக்கும் முன்னே மார்க்கட்டுக்கு சென்றுவிடுவேன். அவளும், அவள் குழந்தைகளும் வரும் வரை காத்திருப்பேன். இந்த காத்திருப்பு அவளுக்காகவா, இல்லை குழந்தைகளுக்காகவா தெரியவில்லைதான். முதலில் தனியாய் விளையாடிக்கொண்டிருக்கும் அந்த சிறுமியிடம் தயங்கி தயங்கித்தான் நான் அடியெடுத்து வைத்தேன். ஆனால், இப்பொழுது அச்சிறுமியின் கையை பிடித்துக்கொண்டு மார்க்கட் முழுவதும் சுற்றி திரியும் அளவு முன்னேறிவிட்டேன்.

நான் மட்டுமில்லை என்னுடன் நாலைந்து பூனைகளும் அவளுக்காக காத்துக்கிடக்கும். அவள் வாடகை காரை விட்டு இறங்கும்போதே ஒன்றன்பின் ஒன்றாக வந்து ஒட்டிக்கொள்ளும். அதிலும் அந்த கருப்பு பூனை அவளுடன் பேசி, சிரித்து சண்டைபோட்டு போகும் அழகே தனிதான். அப்படிதான் ஒரு நாள் என்னைப் பார்த்து அவள் ஏதோ சொல்லி போனாள், நான் ஒன்றும் புரியாமல் பூக்கடைகாரரை பார்த்தேன்

“நீயும், இந்த பூனைகளும் ஒண்ணுன்னு சொல்லிட்டுப் போறா” அவர் என்னை முறைத்தபடி பார்த்தார்.

“அதை விடுங்கண்ண, அவளை கவனிச்சிங்களா? பிள்ளைக்கு மறக்காமல் தாய்ப்பால் கொடுக்குறா, அந்த விசயத்தில் ரொம்ப நல்லவ”

“கிழிச்சா, அவ பாலை குடிக்கிறதுக்கு பதிலாக அந்த குழந்தை கள்ளிப்பாலை குடிக்கலாம்”

“என்னெண்ண பச்ச பிள்ளையைப் பார்த்து இப்படியொரு வார்த்தையை சொல்லிட்டிங்க,” என் பதட்டத்தையும், ஆத்திரத்தையும் கவனித்த அவர்

“பின்னயென்னம்மா கஞ்சாவையும், தண்ணீயையும் குடிச்சுட்டு பால் கொடுக்குறா! போதையான பாலை பிள்ளை குடித்தால், அவளைத் தொந்தரவு செய்யாது. அந்த பிள்ளையும் போதையிலையே தூங்கிட்டு இருக்கும்! இன்னும் மூணு மாசம் போச்சுன்னா பால் கொடுக்கமாட்டா நேரடியாகவே பீரை ஊத்தி விடுவா! அது கூட நீ புரிஞ்சுக்காமல் என்மேல் கோபப்படுற....”

எனக்கு என்ன சொல்வதென்று புரியவில்லை. ‘ராட்சசிமுண்டை, இவளை எந்த அசிங்கமான வார்த்தை சொல்லி திட்டினாலும் அந்த வார்த்தையே அவளை பார்த்து என்னை விட நீதாண்டி அசிங்கமானவன்னு காறிகிட்டு துப்பும்! கடவுளே இப்ப நீதான் கொடுமையானவனாகவும், கெட்டவனாகவும் என் பார்வைக்கு தெரிகிறாய், கண்ணீருடன் ஐந்து வருடங்களுக்கு முன்பே கழிவி கவுத்த என் அடிவயிற்றைத் தடவிக்கொண்டேன்.

சிறிது நாட்களாகவே என் மனதில் ஓர் எண்ணம். அது தப்புயென்று தெரிந்தும் மனம் பயப்பிடவில்லை. செய்து பார்த்தால்தான் என்னவென்று தோன்றுகிறது. என் கணவர் கூட திட்ட துவங்கி விட்டார் “வரவர உன் போக்கு சரியில்லை எப்ப பார் மார்க்கட் பக்கம் சுத்திகிட்டே இருக்க! முன்பெல்லாம் பொழுது போனா வீட்டைவிட்டு வெளிய போகமாட்ட. ஆனால், சமீபகாலமாக பொழுது போறதே மார்க்கட்டு உள்ளதான்! இது சரியில்லை.” அவர் அதட்டல் என்னை உறுத்தினாலும், புது சிந்தனையை உதிக்க வைத்தது. அதை என் கணவரிடம் மட்டுமில்லை வேறு யாரிடமும் கேட்க பயமாக இருந்தாலும் துணிந்து பூக்கடைக்காரரிடம்

“ஏண்ண திருடினால் இங்க என்ன தண்டனை கொடுப்பாங்க....” நான் மென்று முழுங்கவே

“அது திருட்டை பொருத்து. ஆமாம், நீ என்ன திருடப் போற?” அவர் நக்கலாக சிரிக்கவே

“பிள்ளையை அண்ண!.....” வாய் தவறி உளறினேன்.

“என்னது பிள்ளையா?” அதிர்ச்சியில் அவர் முகம் வெளிறியது. நான் சுதாரித்தவளாக

“ஆமாண்ண கருவேபிள்ளைக் கண்ணு.... தூக்கிடலாம்னு இருக்கேன்” என் குரலில் புது தைரியம் தெரித்தது.

என் எண்ணத்தை அவள் புரிந்துக்கொண்டாளோ என்னவோ மூன்று நாட்களாக அவள் மார்க்கட் பக்கம் வரவே இல்லை, நானும் பூனைகளும் தவித்துதான் போனோம். நான்காம் நாள் வெளுத்த முகத்துடன், அளவுக்கு அதிகமான தள்ளாட்டத்துடன், அசிங்கமாக பேசியபடி, ஆங்காங்கே துப்பிக்கொண்டு மார்க்கட்டையே அளந்து வந்தாள். கருப்பு பூனை அவளிடம் ஏனோ நிறையவே அடிவாங்கியது. நான் மறைமுகமாக அடி வாங்கினேன். குழந்தைகளை என்னிடம் விடவில்லை. சின்ன வயதில் பள்ளிக்குப் போகும்போது மஞ்ச பையின் ஒரு பக்கம் காது அறுந்து விடும், அதை விட்டுவிடவும் முடியாமல், தூக்கவும் முடியாமல் காதறுந்த பையை இழுத்துச் செல்வது போல பிள்ளைகளை இழுத்துக்கொண்டே சுற்றித் திரிந்தாள். கருப்பு பூனையைப் போல நானும் வாய்விட்டு அழமுடியாமல் அவள் பின்னால் சுற்றி திரிந்தேன். ஒரு முடிவோடு வீடு வந்து சேர்ந்தேன், நாளை யார் தடுத்தாலும் சரி, என்ன நிகழ்ந்தாலும் சரி, என் முடிவில் எந்த மாற்றமும் இல்லை.

மறுநாள் காளியைப் போல் புயலாய் மார்க்கட்டுக்குள் நுழைந்த நான் கோழையாகிப் போனேன். என் உடல் தடதடவென ஆடத்துவங்கியது. ‘நான் இன்னும் திருடவே ஆரம்பிக்கவில்லை அதற்குள் இவள் காவலர்களை அழைத்துக்கொண்டு வந்து விட்டாள்!’ நான் சந்தேகத்துடன் பூக்கடைகாரரைப் பார்த்தேன்.

“வாம்மா உனக்காகத் தான் காத்துக்கிட்டு இருக்கேன், என்ன ஏதுன்னு தெரியலை! பத்து பதினைந்து போலிசோட மதியமே வந்து விட்டாள், ஏதோ பெரிய தப்பு செஞ்சு மாட்டிகிட்டானு நினைக்கிறேன்! ரொம்ப அழுதுட்டா! பாக்கவே பாவமாருக்குமா,”

Tamil Short Story – Second Prize

ரமா சுரேஷ் (Rama Suresh)

ராட்சசி (Demoness)

என் கண்களில் வழிந்த கண்ணீரை அவசரமாக துடைத்துக் கொண்டே, அவளை ஓரக்கண்ணால் பார்த்தேன். அவள் முகத்திற்கே உரிய திமிர் அழுது வடிந்துக் கொண்டிருந்தது, அவளும் என்னைப் பார்த்துவிட்டாள். அதே ஆள்காட்டி விரலை நீட்டிமடக்கி கூப்பிடவும் நான் சுற்றும் முற்றும் குழந்தையைத் தேடினேன். அவள் 'உன்னையை' தான் வா என்று சைகை செய்யவும், ஒரு காவலர் என் அருகில் வந்துவிட்டார். என் உலகம் இருளத் துவங்கியது. எனக்கு பதிலாக பூக்கடைகாரர் தான் பேசினார்

"உனக்காகத் தான் அவள் காத்துக்கிட்டு இருக்காளாம்! என்னத்த பண்ணி தொலைச்ச?" பூக்கடைகாரர் அடிதொண்டையில் அதட்டவே அவர் கைகளைப் பிடித்துக்கொண்டு

"இல்லண்ண நான் சும்மாதான், நினைச்சேன்! அதுக்கெல்லாமா?" பயத்தில் உளறத் துவங்கினேன்.

"எதுவும் பேசாம என் பின்னால் வா" அதட்டியபடி அவர் முன்னே செல்லவும் நான் கண்ணீருடன் பின் சென்றேன்

என்னைப் பார்த்தவுடன் அவள் முகத்தில் அந்த திமிர் எங்கிருந்தோ வந்து ஒட்டிக் கொண்டது. காலுக்கடியில் கிடந்த கருப்பு பூனையை அன்போடு விரட்டியவள், தோளில் கிடந்த குழந்தையை வாரி அணைத்து முத்தமிட்டு என் முன்னே நீட்டினாள், நான் கண்ணீருடன் விழிக்கவே அருகில் விளையாடிக் கொண்டிருந்த குழந்தையை அழைத்து ஏதோ அவள் சொல்லவும், அது சந்தோசமாய் என்னைக் கட்டிக்கொண்டது. அவள் என் கைகளைப் பற்றிப் புரியாத மொழியில் ஏதோ சொல்லி விட்டுப் போனாள் காவலர்களுடன்.

"அம்மாடி அவள் இத்தனை நேரம் உனக்காகத் தான் காத்திருந்தாளாம், அவள் செய்த தப்புக்குத் தண்டனை என்னவாக இருந்தாலும் ஏற்றுக்கொள்ள அவள் தயாராம். ஆனால், அவள் வயிற்றில் பிறந்ததிற்காக இந்த குழந்தைகள் ஏன் தண்டிக்கப்படணும், அதான் உன்னிடம் ஒப்படைத்து விட்டாளாம். உன்னை விட இவர்களுக்கு பாதுகாப்பான, அன்பான தாய் வேறு யாரும் இந்த உலகில் இல்லைன்னு சொல்லிட்டுப் போறா"

பூனைகள் அவள் பின்னால் ஓடின, அவள் கால்களை பாசத்துடன் நக்கிக் கொடுத்தன. என்னால் அவள் பின்னால் ஓடமுடியவில்லை. என் கையில் கிடந்த சிசு தன் பொக்கை வாயில் உலகின் அழகை எல்லாம் போட்டு மென்றுக் கொண்டிருந்தது. நான் கண்ணீருடன் ராட்சசியைப் பார்த்தேன். அழகாய் சிரித்தாள்.

மொத்த வார்த்தைகளின் எண்ணிக்கை : 1250